ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை
Department of Examinations, Sri Lanka
NATIONAL EVALUATION AND TESTING SERVICE
පැලවත්ත, බත්තරමුල්ල.
பெலவத்தை, பத்தரமுல்ல
Pelawatta, Battaramulla.

මගේ අංකය / எனது இல / My No } 6/16/AL/PRAC/2024
ඔබේ අංකය / உமது இல / Your No }
දිනය / திகதி / Date } 2024.11.12

දුරකථන / தொலைபேசி / Telephones } 2786200, 2784201, 2785202, 2784203, 2784204, 2786205, 2784206,
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } 011-2785220
තැපැල් ලිපිනය / அஞ்சல் முகவரி / POSTAL ADDRESS — තැ.පෙ. 1503, කොළඹ / த.பெ. 1503 கொழும்பு / P.O.Box 1503 Colombo
අන්තර්ජාල ලිපිනය / இணையதள முகவரி / Internet Address } www.doenets.lk
E-mail : examd@sltnet.lk

சகல அதிபர்களுக்கும்,

**க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – 2024**
**செய்முறைப் பரீட்சைக்கு பரீட்சகர்களை தெரிவுசெய்வதற்கான விவரங்களைப் பெற்றுக்கொள்ளல்**

மேற்படி பரீட்சைக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை உயர் தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களை செய்முறைப் பரீட்சகர்களாகத் தெரிவு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் பரீட்சைத் திணைக்கள இணையத்தளத்தில் (www.donets.lk) வெளியிடப்பட்டுள்ளது. நிகழ்நிலை முறைமையில் (Online) விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அதன் அச்சுப் பிரதியை பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தி 2024.11.30 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். நிகழ்நிலை (Online) முறைமையில் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யும் விதத்தை படிப்படியாக காட்டியுள்ள அறிவுறுத்தற் பத்திரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அரசு அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் நிரந்தர பதவியுடைய ஆசிரியர் மட்டுமே செய்முறைப் பரீட்சைக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும். (இணைப்பு 01 ஐப் பார்க்கவும்)

02. கீழ்க் காணப்படுகின்ற பாடங்களுக்கான வெற்றிடங்கள், தகைமைகள், சிரேஷ்ட நிலை என்பவற்றின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 28 - மனைப்பொருளியல் | 53 - நடனம் (பரதம்) |
| 55 - சங்கீதம் (கர்நாடகம்) | 58 - நாடகமும் அரங்கியலும் (தமிழ்) |

2.1 53 – நடனம் (பரதம்) பாடத்துக்கான செய்முறைப் பரீட்சை **கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மற்றும் கிளிநொச்சி** ஆகிய பிரதேசங்களில் மாத்திரம் நடைபெறும்.

2.2 55 – சங்கீதம் (கர்நாடகம்) பாடத்துக்கான செய்முறைப் பரீட்சை **கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கல்முனை, மன்னார், திருகோணமலை, பதுளை, மாத்தளை மற்றும் இரத்தினபுரி** ஆகிய பிரதேசங்களில் மாத்திரம் நடைபெறும்.

2.3 28 – மனைப்பொருளியல் பாடத்துக்கான செய்முறைப் பரீட்சை **கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, குருநாகல், கண்டி** ஆகிய பிரதேசங்களில் மாத்திரம் நடைபெறும்.

2.4 58 – நாடகமும் அரங்கியலும் செய்முறைப் பரீட்சை **யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கல்முனை, மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை** ஆகிய பிரதேசங்களில் மாத்திரம் நடைபெறும்.

03: 65 – பொறியியற் தொழில்நுட்பவியல், 66 – உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடங்களுக்காக கேட்கப்பட்டுள்ள தகைமைகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இப்பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சை நாட்டின் சகல மாவட்டங்களிலும் இடம்பெறும்.

3.1 **65 – பொறியியற் தொழில்நுட்பவியல் செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள ஆசரியர்களுக்கான தகைமையீனங்கள்**

- ஆக்கத்திறனும் தொழில்நுட்பவியலும் பாடத்திற்கான நியமனம் பெற்றவர்,
- பொறியியற் தொழில்நுட்பவியல் பாடம் கற்பிப்பவர்,
- குறித்த பாடத்தில் கற்பித்தலில் டிப்ளோமாதாரி ஆசிரியர் அல்லது தொழில்நுட்பப் பயிற்சி பெற்ற ஆசிரியராயிருத்தல்.

3.2 **66 – உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் செய்முறைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவுள்ள ஆசரியர்களுக்கான தகைமையீனங்கள்**

- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்திற்கான நியமனம் பெற்றவர்,
- விஞ்ஞானத்தில் விசேட பட்டம் (விவசாய விஞ்ஞானம்)
- விஞ்ஞானத்தில் பட்டம் (உயிரியல் விஞ்ஞானம்)
  பெற்ற பட்டதாரி ஆசிரியராயிருத்தல்.

04. தாம் வதியும் மாவட்டம், சேவை செய்யும் மாவட்டம், கடந்த வருடம் பணியாற்றிய மாவட்டம் தவிர்த்து வேறு மாவட்டத்தில் பணியாற்றுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும். இச்செய்முறைப் பரீட்சைப் பணிக்கு பரீட்சகராக தெரிவுசெய்யப்பட்டால் என்னால் நியமிக்கப்படும் எந்தவொரு மாவட்டத்திலும் பணியாற்றுவதற்கு தயாராயிருத்தல்.

05. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரஅட்டவணை சரியானது என அதிபரால் தனிப்பட்ட முறையில் சரிபார்த்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் ஆசிரியர்களால் விண்ணப்பப்படிவத்தில் தவறான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் தரப்பட்டுள்ளமை கண்டறியப்படின் உறுதிப்படுத்தும் அலுவலராக இது தொடர்பான பொறுப்பை நீங்களே ஏற்க வேண்டும் என்பதை தயவுடன் கருத்திற் கொள்ளவும். மேலும் உறுதிப்படுத்தும் அதிகாரத்தை வேறொருவருக்கு கையளிக்க வேண்டாம் என்பதையும் மேலும் அறியத் தருகின்றேன்.

முகவரி : பரீட்சை ஆணையாயர் நாயகம்
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த, பத்தரமுல்ல.

(கடித உறையில் இடது மேல் பக்க மூலையில் "2024 க.பொ.த. (உ.த) செய்முறைப் பரீட்சை" எனக் குறிப்பிடவும்.

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர
பரீட்சை ஆணையாளர் நாயகம்

பிரதிகள்: சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள் - த.அ.கொ
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள் - த.அ.கொ

**இணைப்பு 01**

**இலங்கை பரீட்சைத் திணைக்களம்**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புப் பெறுபேற்றுக் கிளை**

## 2024 - க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை பரீட்சகர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை நிகழ்நிலை (Online) முறைமையில் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

01. விண்ணப்பப்படிவத்தைப் பூரணப்படுத்தும் போது உண்மையான தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும். உண்மைக்கு மாறான தகவல்கள் உள்ளடக்கப்படின் நிரந்தரமாக பரீட்சைப் பணிகளிலிருந்து நீக்கப்படுவர்.

02. செய்முறைப் பரீட்சகர் குழுவிற்கு விண்ணப்பிக்கும் அலுவலரின் குடும்ப உறுப்பினரொருவர் அல்லது வீட்டில் வதிபவர் ஒருவர் மேற்படி பரீட்சையின் செய்முறைப் பரீட்சைப் பாடங்களுக்கு தோற்றுவாராயின் அவ் அலுவலர் இப்பரீட்சைக் குழுவிற்காக **விண்ணப்பிக்க முடியாது.**

03. எவரேனும் ஒரு அலுவலர் இச்செய்முறைப் பாடங்களுக்கு பிரபல்யமான தனியார் வகுப்புக்கள் நடத்துபவராயின் அவர் பரீட்சைக் குழுவின் எப்பதவிக்கும் **தகுதியற்றவராதலால் விண்ணப்பித்தலாகாது.** அரசு அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் நிரந்தர பதவியுடைய ஆசிரியர் மட்டுமே செய்முறைப் பரீட்சைக் குழுவிற்கு விண்ணப்பிக்க முடியும்.

04. நிகழ்நிலை முறையில் விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முறைகளில் செயற்படுத்த முடியும். விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின்,

- ✶ உத்தியோகபூர்வ இணையத்தளத்தளமான (https://doenets.lk) இல் நுழைந்து "எமது சேவைகள்" (our services) இன் கீழுள்ள "EXAM INFORMATION CENTRE" என்பதை கிளிக் செய்த பின்னர் "G.C.E. (A/L) – Examination 2024 Obtaining Information to Select Examiners for the for practical Tests" என்பதை click செய்வதன் மூலமோ,
- ✶ பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலியைப் (Mobile Application) பயன்படுத்தி "DoE" இற்குள் நுழைந்து "EXAM INFORMATION CENTRE" என்பதை click செய்த பின்னர் "G.C.E. (A/L) – Examination 2024 Obtaining Information to Select Examiners for the for practical Tests" click செய்வதன் மூலமோ,
- ✶ https://online.exams.gov.lk/eic பிரவேசித்த பின்னர் கிடைக்கப்பெறும் அனுமதி உறையினுள் "Personal Account Login" முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

05. நட்சத்திர (*) குறியீடு காட்டப்பட்டுள்ள பகுதிகளை கட்டாயமாக பூரணப்படுத்துவதுடன் தமக்குரிய ஏனைய பகுதிகளையும் தமக்கு உரித்தானவற்றை பூரணப்படுத்துதல் வேண்டும்.

06. நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பப்படிவத்தின் முதல்பக்கத்தைப் பூரணப்படுத்தும் போது தங்களுடைய **செல்லிடத் தொலைபேசி இலக்கத்தையும்** மேலதிகமாக **WhatsApp** இலக்கத்தையும் நிரந்தர தொலைபேசி இலக்கத்தையும் (இருப்பின்) உள்ளடக்கவும். அவ்வாறு இல்லையெனில் தங்களுடைய வேறொரு தொலைபேசி இலக்கம் ஒன்றையோ உள்ளடக்கவும்.

07. இணையத்தள பக்கங்களை மாற்றுவதற்கு "Back" அல்லது "Next" பொத்தானை பயன்படுத்தவும். அதில் இரண்டாவது பக்கத்தில் நீங்கள் விண்ணப்பிக்கும் மாவட்டத்திற்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியிலுள்ள வேறு எந்த மாவட்டத்திலாயினும் பணியாற்றுவதற்கு **விருப்பமா? இல்லையா? என்பது தொடர்பாக நன்கு விளக்கம்பெற்று** பூரணப்படுத்துக.

08. விண்ணப்பப்படிவத்தில் சகல பகுதிகளையும் பூர்த்தி செய்து "Submit" பொத்தானை Click செய்த பின்னர் தங்களுடைய விண்ணப்பப்படிவத்தை PDF வடிவத்தில் தரவிறக்கம் (Download) செய்து கொள்ள முடியும். அவ்விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை (Printout) தாங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். "Submit" செய்வதற்கு முடியாமைக்கு முக்கிய காரணமாக தங்களால் நட்சத்திர (*) குறியீடுள்ள பகுதிகள் சரியாக பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் என்பதால் மீண்டும் முன்பக்கங்களை சரிபார்க்கவும்.

09. அச்சுப்பிரதியில் இல 13 **பகுதியை (நேர அட்டவணை)** கையெழுத்தில் பூரணப்படுத்தி நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக உறுதிப்படுத்துதல் வேண்டும்

10. தாங்கள் இதற்கு முன்னர் பிரதம/உதவிப் பரீட்சகராக பணியாற்றியிருப்பின் அச்சுப்பிரதியின் வலது பக்க மேல் மூலையிலுள்ள கூட்டில் பணியாற்றிய வருடங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்.

11. **சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.**

12. உரிய நிறுவனத் தலைவர்/அதிபர் மூலமாக இல 15 **வது பகுதியை** பூரணப்படுத்திய பின்னர் சகல விண்ணப்பப்படிவங்களையும் ஒரே உறையிலிட்டு 2024.11.30 ஆம் திகதிக்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல**

13. முகவரி எழுதிய உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2024 க.பொ.த. (உ.தர)ப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சை"** என குறிப்பிடவும்.

14. தங்களுக்கு மேலதிகமாக அறிவுறுத்தல்கள் தேவைப்படின் கீழுள்ள தொலைபேசி இலக்கங்களூடாக பாடசாலைப் பரீட்சைகள் **ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளையுடன்** தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம் : 0112784208 / 0112784537